# QB365 Question Bank Software Study Material

## கூறெடுப்பு முறைகளும் புள்ளியியல் அனுமானித்தலும் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல்

மொத்த மதிப்பெண் : 37

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

37 x 1 = 37

1) முடிவுறு அல்லது முடிவுறா ________ என்பது அதில் உள்ள முடிவுறு அல்லது முடிவுறா உறுப்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்தாகும்.

**(அ) முழுமைத்தொகுதி** (ஆ) முழுமைக்கணிப்பு (இ) தொகுதிப் பண்பளவை (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

2) ஒரு முழுமைத் தொகுதியின் ________ கூறு என அழைக்கப்படுகிறது.

(அ) முடிவுறா கணம் **(ஆ) முடிவுறு உட்கணம்** (இ) முடிவுறு கணம் (ஈ) முழுமை கணம்

3) ஒரு முழுமைத் தொகுதியின் முடிவுறு உட்கணத்தை _______ என கூறலாம்

**(அ) கூறு** (ஆ) முழுமைத்தொகுதி (இ) முழுமை (ஈ) முழுமைக் கணிப்பு

4) கூறுகளிலிருந்து கணக்கிடப்பட்ட எந்தவொரு புள்ளியியல் அளவைகளும் ________ எனப்படும்.

(அ) தொகுதிபண்பளவை **(ஆ) கூறு பண்பளவை** (இ) முடிவுள்ள அளவை (ஈ) எண்ணத்தக்கதற்ற அளவை

5) ________ என்பது முழுமைத் தொகுதியிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு சமமான வாய்ப்பை அளிக்கும் ஒன்றாகும்.

(அ) பண்பளவை **(ஆ) சமவாய்ப்பு கூறு** (இ) புள்ளியியல் அளவை (ஈ) முழுமைத் தொகுதி

6) சமவாய்ப்பு கூறானது முழுமைத்தொகுதியில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் மாதிரியில் இடம்பெறுவதற்கான சமவாய்ப்பைப் பெற்றிருக்கும் உறுப்புகளால் ஆனது என கூறியவர்.

**(அ) ஹார்பர்** (ஆ) பிஷர் (இ) கார்ல் பியார்ஸன் (ஈ) டாக்டர் யேட்ஸ்

7) கீழ்க்காண்பவற்றில் எது நிகழ்தகவு கூறெடுப்பு வகையைச் சார்ந்தது.

(அ) நோக்கமுள்ள மாதிரித்தேர்வு (ஆ) கருத்து கணிப்புமுறை **(இ) எளிய சமவாய்ப்பு கூறெடுப்பு**
(ஈ) ஏதுவான முறை

8) N அளவுள்ள ஒரு முழுமைத் தொகுதியிலிருந்து சமவாய்ப்பு கூறெடுப்பு முறையில் முதன் முறை ஒரு உறுப்பு தேர்வு செய்யும்போது அதன் நிகழ்தகவு______.

(அ) $\frac{n}{N}$ **(ஆ) $\frac{1}{N}$** (இ) $\frac{N}{n}$ (ஈ) 1

9) ________ யில் ஒரு சீரற்ற முழுமைத் தொகுதியானது சீரான துணை முழுமைத் தொகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.

(அ) நிகழ்தகவு சாரா கூறெடுப்பு முறை (ஆ) எளிய சமவாய்ப்பு கூறெடுப்பு முறை
**(இ) படுகை வாய்ப்பு கூறெடுப்பு முறை** (ஈ) முறைப்படுத்திய கூறெடுப்பு முறை

10) கூறெப்பில் உள்ள பிழைகள்_______.

**(அ) இருவகை** (ஆ) மூன்று வகை (இ) நன்கு வகை (ஈ) ஐந்து வகை

11) கூறு அளவையைப் பயன்படுத்தி முழுமைத் தொகுதி பண்பளவைக்கான மிக சிறந்த மதிப்பை பெற முற்படும் முறையே ______.

**(அ) மதிப்பீட்டு முறை** (ஆ) மதிப்பீட்டு அளவை (இ) பிழற்சியான மதிப்பீடு (ஈ) திட்டப் பிழை

12) மதிப்பீட்டு அளவையானது மாதிரி புள்ளியியல் அளவையின்________ஐ மதிப்பிட பயன்படுகிறது

**(அ) முழுமைத்தொகுதி பண்பளவை** (ஆ) பிழையான மதிப்பீட்டு (இ) மாதிரி அளவு (ஈ) முழுமைக் கணிப்பு

13) _______ என்ற பண்பானது ஒரு மதிப்பீட்டு அளவையானது மற்றொரு மதிப்பீட்டு அளவையை ஒப்பிடும் போது திறன் வாய்ந்தது என வரையறுக்கப்படுகிறது.

**(அ) திறன்தன்மை** (ஆ) நிறைவுத்தன்மை (இ) பிழையற்றதன்மை (ஈ) நிலைத்தன்மை

14) $P[|\hat{\theta} - \theta| < \varepsilon] \to \infty, \varepsilon > 0$, எனில் $\hat{\theta}$ என்பது $\theta$-ன் _______ உடைய மதிப்பீட்டு அளவையாகும்.

(அ) திறன்தன்மை (ஆ) நிறைவுத்தன்மை (இ) பிழையற்ற தன்மை **(ஈ) நிலைத்தன்மை**

15) மதிப்பீட்டு அளவையானது பண்பளவையில் குறித்த அனைத்து மதிப்பீடுகளையும் உள்ளடக்கிய தரவுகளைப் பெற்றிருந்தால் அது _________ வாய்ந்தது ஆகும்.

(அ) திறன்தன்மை **(ஆ) நிறைவுத்தன்மை** (இ) பிழையற்ற தன்மை (ஈ) நிலைத்தன்மை

16) முழுமைத் தொகுதி பண்பளவை கொடுக்கப்பட்ட இரு எண்களுக்கிடையே அமைந்துள்ளது என எதிர்பார்க்கப்படும் இடைவெளி பண்பளவையின் ______ இடைவெளியாகும்.

(அ) புள்ளி மதிப்பீடு **(ஆ) இடைவெளி மதிப்பீடு** (இ) திட்டப்பிழை (ஈ) நம்பிக்கை

17) முழுமைத் தொகுதி பண்பளவையைக் குறித்த கருதுகோள் அல்லது கூற்றை உண்மை அல்லது அதற்கு மாறாக எடுத்துக்கொள்வது______ ஆகும்.

**(அ) கருதுகோள்** (ஆ) புள்ளியியல் அளவை (இ) கூறு (ஈ) முழுமைக் கணிப்பு

18) முதல் வகைப்பிழை என்பது_____ .

(அ) $H_0$ உண்மை எனில் ஏற்கப்படுவது (ஆ) $H_0$ தவறு எனில் ஏற்கப்படுவது

**(இ) $H_0$ உண்மை எனில் மறுக்கப்படுவது** (ஈ) $H_0$ தவறு எனில் மறுக்கப்படுவது.

19) இரண்டாவது வகைப்பிழை என்பது_______ஆகும்.

**(அ) $H_0$ தவறு எனில் ஏற்பது** (ஆ) $H_0$ உண்மை எனில் ஏற்பது (இ) $H_0$ உண்மை எனில் மறுப்பது

(ஈ) $H_0$ தவறு எனில் மறுப்பது

20) கூறுசராசரியின் திட்டப்பிழையானது _____.

(அ) $\frac{\sigma}{\sqrt{2n}}$ (ஆ) $\frac{\sigma}{n}$ **(இ) $\frac{\sigma}{\sqrt{n}}$** (ஈ) $\frac{\sigma^2}{\sqrt{n}}$

21) ஒரே ஒரு மதிப்பை, மதிப்பீட்டு அளவையாகப் பயன்படுத்தி, தொகுதிப் பண்பளவையின் மதிப்பைப் பெற முடியுமானால்,______என்று அழைக்கப்படுகிறது.

**(அ) புள்ளி மதிப்பீட்டு முறை** (ஆ) இடைவெளி மதிப்பீட்டு முறை (இ) நிலைத் தன்மை

(ஈ) இவற்றில் ஏதுமில்லை

22) $H_0, \mu = \mu_0$ மற்றும் $H_1 = \mu < \mu_0$ எனில்,$\alpha = 0.01$ இருக்கும்போது மறுக்கப்படும் மதிப்பு_____.

(அ) 1.645 (ஆ) -1.645 **(இ) 2.33** (ஈ) -2.33

23) ஒரு முழுமைத் தொகுதியில் கூறின் அளவு 64 மற்றும் கூறின் திட்டவிலக்கம் 32 எனில், மாதிரியின் திட்டப்பிழை_____.

(அ) 0.5 (ஆ) 2 **(இ) 4** (ஈ) 32

24) 95% என்ற சராசரியில் நம்பிக்கை இடைவெளியின் மதிப்பு______.

(அ) 1.28 (ஆ) 1.65 **(இ) 1.96** (ஈ) 2.58

25) இன்மை கருதுகோள் உண்மையாக இருக்கும் போது அதனை நிராகரிப்பது _____ எனப்படும்.

**(அ) முதல் வகைப் பிழை** (ஆ) இரண்டாம் வகைப் பிழை (இ) கூறு பிழை (ஈ) திட்டப்பிழை

26) பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க:

(அ) புள்ளிமதிப்பீடு ஆனது, பல மதிப்புகளைக் கொண்ட ஒரு வீச்சாக தரப்படுகிறது.

(ஆ) கூறு அளவைகளை மதிப்பிடவே கூறெடுத்தல் செய்யப்படுகிறது.

**(இ) முழுமைத் தொகுதி அளவையை மதிப்பிட கூறெடுப்பு செய்யப்படுகின்றது.**

(ஈ) முடிவுறா தொகுதியில் கூறெடுத்தல் இயலாது.

27) குலுக்கல் முறை இவ்வழியில் நடைபெறுகிறது.

**(அ) சமவாய்ப்பு கூறெடுப்பு** (ஆ) படுகை சமவாய்ப்பு கூறெடுப்பு முறை (இ) முறைப்படுத்திய கூறெடுப்பு

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

28) முறைபடுத்திய கூறெடுப்பு முறையில் k என்ற கூறு இடைவெளியின் மதிப்பு _____.

**(அ) N/n** (ஆ) n/N (இ) 1/n (ஈ) 1/N

29) முறைபடுத்திய கூறெடுப்பு முறையில், ஒரு வகுப்பில் 100 மாணவர்களில் 10 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் எனில், k =_____.

**(அ) 10** (ஆ) 1/10 (இ) 100 (ஈ) 1/100

30) திட்ட இயல்நிலை மாறியில் 5% மதிப்பு____.

**(அ) $|Z| \geq 1.96$** (ஆ) $|Z| < 1.96$ (இ) $|Z| \geq 2.58$ (ஈ) $|Z| < 2.58$

31) மாதிரி திட்ட விலக்கத்திற்கான திட்டப்பிழை_____.

(அ) $\sigma^2$ (ஆ) $\frac{\sigma}{n}$ **(இ) $\frac{\sigma}{\sqrt{n}}$** (ஈ) $\frac{\sqrt{n}}{\sigma}$

32) கருதுகோள் சோதனை எதன் அடிப்படையில் பெறப்படுகிறது?

**(அ) மறுக்கப்படும் பகுதி** (ஆ) ஏற்கும் பகுதி (இ) கூறுவெளி (ஈ) கூறுவெளியின் உட்கணம்

33) மறுக்கப்படும் பகுதி இயல்நிலை பரவலின் வலது முனையில் அமையுமானால் $H_1$, ஐ______ என அழைக்கிறோம்.

(அ) இரு முளை சோதனை (ஆ) இடது முனை சோதனை **(இ) வலது முனை சோதனை**

(ஈ) இவற்றில் ஏதுமில்லை

34) வலதுமுனை சோதனையில் 5% மிகைகாண் நிலையின் தீர்மான மதிப்பு_____.

**(அ) 1.645** (ஆ) 2.33 (இ) 2.58 (ஈ) 1.96

35) கருதுகோள் சோதனையில் $H_0$ : $\mu$ = 45 மற்றும் அதற்கு மாறாக $H_1$= $\mu_0$< 45 எனில்,______.

**(அ) வலது முனை சோதனை** (ஆ) இடது முனை சோதனை (இ) இருமுனை சோதனை

(ஈ) இவற்றில் ஏதுமில்லை

36) $H_1$= $\mu \neq \mu_0$ இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்று கருது கோளானது _____என அழைக்கப்படுகிறது.

**(அ) இருமுனை சோதனை** (ஆ) வலது முனை சோதனை (இ) இடது முனை சோதனை

(ஈ) இவற்றில் ஏதுமில்லை

37) மாதிரி விகித சமத்திற்கான திட்டப்பிழை______.

**(அ) $\sqrt{\frac{PQ}{n}}$** (ஆ) $\sqrt{\frac{pq}{n}}$ (இ) $\frac{PQ}{n}$ (ஈ) $\frac{pq}{n}$